2001 செப்டம்பர் 12]

அரசு அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 84, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

84—

துறைமுகம்

***3686—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பழையார் மீன்பிடி துறைமுகத்தை நவீனப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதியில் உள்ள பழையார் மீன் பிடி துறைமுகத்தை நவீனப்படுத்தும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழி தொகுதியில் உள்ள பழையார் மீன்பிடி துறைமுகத்தின் இரண்டாம் கட்டப் பணிக்காக மத்திய அரசிடம் ரூபாய் 10 கோடியே 60 இலட்சம் நிதி கோரியுள்ள இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாகவும், எனது தொகுதி மீனவர்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட பழையார் மீன்பிடி துறைமுகத்தில் மீன் பிடிப்பதற்காக சுமார் 200 விசைப் படகுகளும், 150-க்கும் மேற்பட்ட சிறிய விசைப் படகுகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சுமார் 5,000 டன் மீன்கள் கேரளாவிற்கும் சென்னைக்கும் விற்பனைக்காக அனுப்பப்படுகின்றன. போக்குவரத்திற்குச் சரியான சாலை வசதி இல்லாமல் வியாபாரிகளும் மீனவர்களும் மிகவும் சிரமப்படுகிறார்கள். இந்த மேம்பாட்டுத் திட்டப் பணிகளோடு சேர்த்து சாலை வசதியை

நல்ல முறையில் செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியில் உள்ள பழையார் மீன்பிடி துறைமுகத்தை நவீனப்படுத்தும் திட்டம் எதுவும் தற்போது இல்லை. பழையார் மீன்பிடி துறைமுகத்தினை விரிவாக்கம் செய்ய பழையார் மீன்பிடி துறைமுக நிலை-2 என்னும் திட்ட அறிக்கையின்மீது பெங்களூர் மத்திய கடலோர பொறியியல் மற்றும் மீன் வள இயக்குநரின் அறிக்கை பெறப்பட்டு, அதனடிப்படையில் ரூ.10.60 கோடிக்கு திட்ட மதிப்பீடு அறிக்கை தயார் செய்து, மத்திய அரசின் நிருவாக ஒப்புதல் பெற்றுத் தரும்படி ஆணையர் மற்றும் மீன் துறை இயக்குநரால் அனுப்பப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் மத்திய, மாநில அரசுகளிடமிருந்து நிதி ஒப்புதல் பெற்று செயல்படுத்த வேண்டிய நிலையில் இருப்பதால், இதற்கான காலக் கெடு எதுவும் நிர்ணயம் செய்ய இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) சத்துணவுத் திட்டத்தில் முட்டை வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதால் உற்பத்தியாளர்கள் நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சத்துணவுத் திட்டத்தில் முட்டை வழங்குவதை நிறுத்தியதால் முட்டை உற்பத்தியாளர்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்க, ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. ஜி.கே. மணி ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். கவன ஈர்ப்பு அறிவிப்பாக எடுத்து விவாதிக்க, திரு. கு. ஜெயக்குமார் மற்றும் திரு. அ.இரா. மலையப்பசாமி ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள திரு. க. முருகவேல் ராஜன் மற்றும் திரு. இ. கணேசன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்வதற்கு அனுமதி அளிக்கின்றேன். அறிவிப்பை மட்டும் சுருக்கமாகக் கூறுமாறு அழைக்கிறேன், திரு. சி. ஞானசேகரன்.